16th December 1959]

THE HON. SRI C. SUBRAMANIAM : Filmstrips are sold to schools at Rs. 5 per strip.

SRI K. B. S. MANI : தற்போது, அவைகளாகவே சினிமாக் காட்டும் மெஷின்கள் வாங்கி வைத்திருக்கும் ஹைஸ்கூல்களில் தான் பள்ளிச் சிறுவர்களுக்கான சினிமாப் படங்கள் காட்டப்படுகின்றன. இவ்வாறின்றி, இவைகளை எலிமெண்டரி ஸ்கூல்களிலும் காட்டுவதற்கு ஒரு கூட்டு முறையில் ஏற்பாடு செய்ய சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது நாம் தயாரிக்கும் படங்கள் எல்லாமே ஹைஸ்கூல்களுககு உரியவை. எனவே அவைகளை எலிமெண்டரி ஸ்கூல்களில் காட்டமுடியாது. எலிமெண்டரி ஸ்கூல்களுக்காகவும் படங்கள் தயாரிக்க வேண்டுமா, எலிமெண்டரி ஸ்கூல்கள் சினிமாப் படம் காட்டும் கருவியை வாங்கி வைக்க முடியுமா என்பதையெல்லாம் ஆலோசித்துத்தான் இது சம்பந்தமாக எதுவும் சொல்ல முடியும்.

Palar Anicut

* 213 *Q.*—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) when the Palar Anicut was constructed;

(*b*) whether the anicut is efficiently functioning; and

(*c*) if not, the reasons therefor?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The Palar Anicut was constructed in 1858.

(*b*) & (*c*) The anicut is in good condition and serving its purpose except for the silting up at the anicut site and also at the off-takes from it. The silting is due to the flows in the river being sporadic and undependable and due to considerable absorption of surface flow by capillary action.

SRI R. SRINIVASA IYER : பாலாறு அணைக்கட்டு எவ்வளவு உயரம் இருக்கிறதோ அவ்வளவு உயரம் வரையில், அதாவது க்ரெஸ்ட் லெவல்வரையில், மணல் நிரம்பியிருப்பதால், தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கே இது உபயோகிக்கப்படவில்லை. எனவே, இதில் தண்ணீர் ஒரு க்யூஸெக்கூட சேராது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? இந்தக் காரணத்தால், காவேரிப் பாக்கம் முதலிய ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டுபோக வேறு அணைக்கட்டு ஏதாவது கட்ட உத்தேசிக்கப்படுகிறதா ? அப்படி இல்லையானால், இந்த அணைக்கட்டைத் திருத்தியமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் சொல்கிறபடி அங்கே மண் ஓரளவு அதிகமாகத்தான் சேர்ந்திருக்கிறது. எனவேதான் அதற்கு அப்பால் 'பாலார் பாரேஜ்' என்ற பாரேஜைக் கட்ட அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. இந்த 'வர்கிங் க்ரூப்' இல்லாத்தற்கு 'பர்ஸ்ட் ப்ரியாரிட்டி' கொடுத்திருக்கிறார்கள்.